දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපැල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) NA 03/SG/01/2018
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2018.08.
Date )

සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
சுகாதார,போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
**Ministry of Health, Nutrition& Indigenous Medici**

**பொது சுற்றறிக்கை இலக்கம் :** 01-37/2018

பிரதிப்பணிப்பாளர் நாயகம் (இலங்கை தேசிய வைத்தியசாலை),
சகல போதனா வைத்தியசாலை/பொது வைத்தியசாலை பணிப்பாளர்கள்,
சகல ஆதார வைத்தியசாலைகள் /விஷேட நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளடங்களாக,
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற சகல நிறுவனத்தலைவர்களுக்கும்,

**விஷேட தர தாதி (வைத்தியசாலை சேவை) அலுவலர்களின் வருடாந்த இடமாற்றம் - 2018**

விஷேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவியில் கடமை புரிகின்ற, இடமாற்றம் பெற எதிர்பார்த்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. 2018.03.31 ஆம் திகதிக்கு விஷேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிக்கு பதவியுயர்வு பெற்று 01 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், அவர்கள் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய விண்ணப்பித்தல் வேண்டும்.

03. அத்துடன் இடமாற்றக்கட்டளையில் உள்ள, இதுவரை விடுவிக்கப்படாத உத்தியோகத்தர்களின் இடமாற்றம் இரத்து செய்யப்படுவதுடன், அவர்களும் இச்சுற்றறிக்கைக்கு அமைவாக விண்ணப்பித்தல் வேண்டும்.

**04. விண்ணப்பிக்கும் முறை:**

I. இடமாற்றம் கோரும் போது கருத்திற்கொள்ளப்படுவது, அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஆகும். சகல உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் சரியான மற்றும் முழுமையான விபரங்கள் வழங்குவது சகல தாபனத் தலைவர்களினதும் பொறுப்பாகும். மேலும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் தாபனத்தின் சகல தாதி உத்தியோகத்தர்களுக்கும் (மகப்பேற்று விடுமுறை, விஷேட விடுமுறையில் உள்ள உத்தியோகத்தர்கள் அடங்கலாக) அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். பொய்யான தகவல்களை வழங்குதல் மற்றும் தகுதியான உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமை என்பவற்றால் ஏற்படும் சிரமங்கள் குறித்து இவ் அமைச்சு பொறுப்பேற்காது என்பதுடன், அது தொடர்பாக அந்தந்த தாபன தலைவர்கள் பொறுப்பு சொல்ல வேண்டும் என்பதை அவதானத்திற்கு உட்படுத்துகின்றேன்.

II. சகல இடமாற்ற விண்ணப்பங்களும் தாபனத்தலைவர்களின் பரிந்துரையுடன் இணைப்புக்கடிதம் ஊடாக கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பட்டியலிடப்பட்டு தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தியோகத்தரினால் நேரடியாக அல்லது தனிப்பட்டரீதியில் எடுத்துவரப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அதே போன்று அனைத்து நிறுவனங்களும் இணைப்பு 01 இற்கு அமைவாக பூரணப்படுத்தப்பட்ட இடமாற்ற மாதிரிப் படிவம் இல 01 உடன் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாணைகளின் பிரகாரம் அமையாத சகல விண்ணப்பங்களும் எதுவித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

பணிப்பாளர் (நிருவாகம்) 01
சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
இல: 385,
வண. பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை,
கொழும்பு. 10

III. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2018.09.07 என்பதுடன், அத்தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**05. கவனத்தில் கொள்ள வேண்டியவை :**

I. இந்த சுற்றறிக்கைக்கு அமைவாக விண்ணப்பிக்கும் சகலருக்கும் இடமாற்றம் வழங்கப் படுவதாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினூடாக கருதப்படவில்லை என்பதுடன், அவ்வாறு புரிந்து கொள்ளவும் கூடாது.

II. இடமாற்றம் கருத்திற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் வெற்றிடங்கள் காணப்படாத நிறுவனங் களுக்கான கோரிக்கை தொடர்பாக கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

III. மேலே இல.02 ல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்களது விஷேட தர தாதிய உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிக்கு பதவியுயர்வு பெற்று குறித்த பதவிக்கு கடமைக்கு பொறுப்பேற்ற தினத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சேவை மூப்பு ஆவணத்திற்கு அமைவாக இடமாற்ற சபையின் பரிந்துரைகளின் பேரில் இடமாற்ற கட்டளை வழங்கப்படும். அதன் போது ஒரே தினத்தில் விஷேட தர தாதிய உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிக்கு பதவி உயர்வு பெற்று ஒரே தினத்தில் கடமையினைப் பொறுப்பேற்ற உத்தியோகத்தர்கள் காணப்படுமிடத்து அவர்கள் தரம் I தாதிய உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிக்கு பதவி உயர்வு பெற்ற தினத்தின் பிரகாரம் சேவை மூப்பு தீர்மானிக்கப்படும் என்பதுடன் தரம் I தாதிய உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிக்கு பதவி உயர்வு பெற்ற திகதி ஒன்றாக காணப்படுமிடத்து அவர்கள் உயர் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்ற விடுதி முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை பாடநெறியின் இறுப் பரீட்சையில் பெற்ற தகைமைகளின் பிரகாரம் அவர்களது சேவை மூப்பு தீர்மானிக்கப்படும்.

IV. 2018.03.31 திகதி வரை நிலவிய வெற்றிடங்கள், ஓய்வு பெற்றதன் அடிப்படையில் ஏற்பட்ட வெற்றிடங்கள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள புதிய பதவிகள் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் என்பன இடமாற்றங்கள் வழங்கப்படும் போது கருத்திற்கொள்ளப்படும் அதேவேளை சேவை அவசியத்தன்மையும் கருத்திற்கொள்ளப்பட்டு இடமாற்ற கட்டளைகள் வழங்கப்படும்.

V. நிலவுகின்ற வெற்றிடங்கள் இடமாற்றங்கள் கருத்திற் கொள்ளப்படுவதுடன், சேவை அவசியமும் கவனத்தில் கொண்டு இடமாற்ற கட்டளை வழங்கப்படும்.

06. 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்ற சபையினால் பரிந்துரை செய்யப்பட்ட பெயர் பட்டியல் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிட்டு மேன்முறையீடு கோரப்படுவதுடன், மேன்முறையீட்டு சபையின் பரிந்துரையினை கருத்திற்கொண்டு தயாரிக்கப்படும் இடமாற்ற கட்டளையுடனான இறுதி பட்டியல் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அத்துடன் ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் உரிய இடமாற்றக்கட்டளையும் உரிய தாபன தலைவர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படும். **இடமாற்ற சபையின் பரிந்துரைகள் அல்லது வருடாந்த இடமாற்றக் கட்டளை எதுவும் தனிப்பட்ட ரீதியில் யாருக்கும் அறிவிக்கப்பட மாட்டாது.**

07. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் தாபனத்தின் சகல தாதி உத்தியோகத்தர்களுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். இதில் குறிப்பிடப்படாத இடமாற்றம் தொடர்பாக தாக்கம் செலுத்தக்கூடிய பிற விடயங்கள் தொடர்பாக அரச சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவை குழுவின் தீர்மானமே இறுதித்தீர்மானம் ஆகும். இச்சுற்றறிக்கையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஏதேனும் ஒவ்வாமை இருப்பின் சிங்கள மொழியிலான ஏற்பாடே வலுப்பெறும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் கட்டளையின் பிரகாரம்.

B. G. S. Gunathilake
Secretary
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10. Sri Lanka

பீ. ஜீ. எஸ். குணதிலக
செயலாளர்
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

இணைப்பு 01

தா.சே./ வ.இ.மா/2018

**விஷேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிக்கான இடமாற்ற விண்ணப்பப்படிவம் - 2018**

**(அ). உத்தியோகத்தரின் சுய விபரங்கள் :**

01. உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ……………………………………………………………………..........

02. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ………………………………………………………………………………

03. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :- ………………………………………………………………

<table>
<tr><td>04.பிறந்த திகதி</td><td>05. வயது<br>வருடம்:<br>மாதம்:<br>திகதி:</td><td>06. தேசிய அடையாள அட்டை இலக்கம்</td><td>07. பால்</td></tr>
<tr><td rowspan="3">08.நிரந்தர முகவரி</td><td rowspan="3">09. தற்காலிக முகவரி:</td><td>10. தொலைபேசி இலக்கம்:</td><td rowspan="3">11. திருமணமானவர்/திருமணமாகாதவர் என்பது பற்றி:</td></tr>
<tr><td>அலுவலக</td></tr>
<tr><td>தனிப்பட்ட</td></tr>
<tr><td colspan="2">12. வாழ்க்கைத் துணையின் பெயர்:</td><td colspan="2">13. வாழ்க்கைத் துணையின் தொழில் மற்றும் சேவை நிலையம்</td></tr>
</table>

14. பிள்ளைகள் தொடர்பான விபரங்கள் :-

| பெயர் | வயது | கல்வி பயிலும் கல்லூரி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

15. விஷேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவியில் சேவையாற்றிய நிலையங்கள் தொடர்பான விபரங்கள் (தற்போதைய சேவை நிலையம் உட்பட)

| சேவையாற்றிய நிறுவனம் | சேவைக்காலம் (தொடக்கம் - வரை) |
|---|---|
| | |
| | |
| | |
| | |

16. இடமாற்றம் கோருதல் தொடர்பான விபரங்கள் :

| இடமாற்றம் பெற எதிர்பார்க்கும் சேவை நிலையம் | சேவை நிலையம் அமைந்துள்ள நகரம் |
|---|---|
| I | |
| II | |
| III | |
| IV | |
| V | |

17. இடமாற்றம் கோருவதற்கான காரணம் (மேற்படி விருப்பத்தெரிவு தொடர்பாக)

.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................

18. விஷேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) ஆக தற்காலிகமாக இடமாற்றம் பெற்றிருப்பின்

| இடமாற்றம் பெற்ற கால எல்லை | அமர்த்தப்பட்ட சேவை நிலையம் |
|---|---|
| | |
| | |

மேற்குறிப்பிடப்பட்ட சகல விபரங்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதி மொழிகின்றேன்.

.......................
திகதி

............................
உத்தியோகத்தரின் கையொப்பம்

**(ஆ). பிரதான விஷேட தர தாதி உத்தியோகத்தரின் பரிந்துரை :**

பதிற்கடமையாளர் உடன்/ இன்றி, உத்தியோகத்தரை விடுவிப்பதற்கு பரிந்துரை செய்கின்றேன்/ செய்யவில்லை

.....................
திகதி

............................
கையொப்பம்

**(இ). தாபன விபரங்கள் (விடயப்பொறுப்பு முகாமைத்துவ உதவியாளரினால் உத்தியோகத்தரின் சுயவிபரக் கோவைக்கு அமைய பூரணப்படுத்தப்படல் வேண்டும்)**

19. முதல் நியமனத் திகதி : .............................................................................................................

20. சேவையில் நிரந்தரமாக்கப்பட்டதா/இல்லையா என்பது பற்றி : ....................................................

21. தரம் I தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிக்கு பதவியுயர்ந்த திகதி : .......................

பட்டப்பின் படிப்பு தாதியர் பயிற்சி பெற்ற குழு : .......................................................................

பரீட்சை இலக்கம் : ...........................

திறமை இலக்கம் : ..........................

22. விஷேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிக்கு பதவியுயர்ந்த திகதி : .....................

23. விஷேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) அலுவலராக முதல் நியமனம் பெற்ற சேவை நிலையம் ...........................................................................................................

24. விஷேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) அலுவலராக முதல் நியமனம் பெற்று கடமையை பொறுப்பேற்ற திகதி : ....................................

(விஷேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) அலுவலராக முதல் நியமனம் பெற்று கடமையை பொறுப்பேற்ற கடிதத்தின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்

25. தற்போதைய சேவை நிலையத்தில் இணைந்த திகதி : ..............................................

26. தற்போதைய சேவை நிலையத்தில் சேவைக்காலம் (2018.03.31 திகதியன்று) :- ……………………

27. உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? ……………………….

அவ்வாறாயின், குறிப்பு இலக்கம் மற்றும் திகதியைக் குறிப்பிடவும்.

திரு/திருமதி/செல்வி ……………………………………… இன் சுயவிபரக்கோவையின் பிரகாரம் இலக்கம் 01 தொடக்கம் 15 வரையான சகல விபரங்களும் இலக்கம் 18 இன் மூலம் தெரிவித்துள்ள விடயங்களும் இலக்கம் 19 – 27 வரை என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்களும் உண்மையானவை என உறுதி மொழிகின்றேன். மேலும், இவ் உத்தியோகத்தர் இந்த வைத்தியசாலையினால் இடமாற்றம் தொடர்பாக இதற்கு முன்னர் இடமாற்றக்கட்டளை பெறவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

…………………
திகதி

……………………….
விடய பொறுப்பு முகாமைத்துவ
உதவியாளரின் கையொப்பம்

**(ஈ). நிருவாக உத்தியோகத்தர்/வைத்தியசாலை செயலாளரின் பரிந்துரை :**

திரு/திருமதி/செல்வி ……………………………………… இன் சுயவிபரக்கோவையின் பிரகாரம் இலக்கம் 01 தொடக்கம் 15 வரையான சகல விபரங்களும், இலக்கம் 18 இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல விபரங்களும், இலக்கம் 19 தொடக்கம் 27 வரை விடயப்பொறுப்பு உத்தியோகத்தரினால் வழங்கிய விபரங்களும் உண்மையானவை என உறுதி மொழிகின்றேன்.

…………………
திகதி

……………………….
கையொப்பம்

**(உ). தாபனத்தலைவரின் பரிந்துரை :**

சுயவிபரக்கோவையின் பிரகாரம் இலக்கம் 01 தொடக்கம் 15 வரையான மற்றும் 18 மற்றும் 19 தொடக்கம் 27 வரை குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என உறுதி மொழிகின்றேன். மேற்படி பெயர் குறிப்பிட்ட உத்தியோகத்தரின் இடமாற்றக்கோரிக்கை, பதிற்கடமையாளர் உடன்/ இன்றி/ பின்னர் வழங்குதல் எனும் அடிப்படையில் பரிந்துரை செய்கின்றேன்.

…………………
திகதி

……………………….
தாபன தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை

வருடாந்த இடமாற்றம் இலக்கம் 01 மாதிரிப்படிவம்)

**விஷேட தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) பதவிக்கான வருடாந்த இடமாற்ற விண்ணப்பத்தின் உப ஆவணம் - [illegible]**

தாபனத்தின் பெயர் : ……………………………………………

| இல | உத்தியோகத்தரின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | I ம் தர தாதி உத்தியோகத்தர் (வைத்தியசாலை சேவை) தரத்திற்கு பதவியுயர்ந்த திகதி | உமது தாபனத்தில் இணைந்த திகதி | இடமாற்றம் பெற எதிர்பார்த்துள்ள நிலையம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

தகைமைகளைப்பூர்த்தி செய்துள்ள, இடமாற்றம் கோரிய சகல உத்தியோகத்தர்களினதும் விண்ணப்பங்கள் இந்த உப ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என உறுதி மொழிகின்றேன்.

தயாரித்தவர்:

கையொப்பம் : ……………………………………

பெயர் : ……………………………………………

திகதி : ……………………………………………

பரிசீலித்தவர்:

கையொப்பம் : ……………………………………

பெயர் : ……………………………………………

திகதி : ……………………………………………

……………………………………………

நிறுவனத்தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை